**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.11
https://ngmtamil.in/

# ஒப்பாய்வு நோக்கில் சங்க இலக்கிய வாழ்வியலும் பூமணி நாவலில் இடம் பெற்ற வாழ்வியலும்

**ர. ரபிக்கா பர்வீன்**

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ், இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி – 626 123

மின்னஞ்சல் முகவரி: r.rabeekaparveen@gmail.com

**முனைவர் ரா. செண்பகவள்ளி,**

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ், இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி – 626 123

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியம் மனித வாழ்வை இயற்கையோடு இணைத்துப் பதிவு செய்த முதன்மையான செம்மொழி இலக்கியம் ஆகும். சங்க இலக்கிய பாடல்களில் காதல், வீர வாழ்க்கை, சமூக அமைப்பு, பண்பாடு, உழைப்பு, பெண்களின் நிலை, அரசியல், அறநெறி, போன்ற இயற்கை சார்ந்த வாழ்வியல் கோட்பாடுகளை வெளிப்படுத்துகின்றன. இதை போன்று நவீன தமிழ் இலக்கியத்தில் கிராமிய மக்களின் வாழ்க்கையை பற்றி நுணுக்கமாகப் பதிவு செய்த எழுத்தாளர்களில் மிக முக்கியமானவர் பூமணி ஆவார். இவருடைய நாவல்கள் நிலம், உழைப்பு, சாதி, வறுமை என அடித்தட்டு மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்துவனாக உள்ளன.

சங்க கால இலக்கியங்களும், பூமணியின் நாவல்களும் கால வேறுபாடு கொண்டிருந்தாலும் மனித வாழ்வின் அடிப்படைகளை வெளிப்படுத்துவதில் பல ஒற்றுமைகளை கொண்டிருக்கின்றன என்பதனை பற்றி இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

**சங்க இலக்கியங்களில் வாழ்வியல்**

சங்க இலக்கியம் தமிழரின் வாழ்வியலை இயற்கையோடு இணைத்து பதிவு செய்கின்றன. அவை அகப்பொருள், புறப்பொருள் என இரண்டு பிரிவுகளின் வாயிலாக மனித உணர்வுகளையும் சமூக வாழ்க்கையையும் எடுத்துரைக்கின்றன. சங்க காலத்தில் நிலத்தை ஐந்திணைகளாக பகுத்துள்ளனர். அவை,

| **திணைகள்** | **நிலம்** | **வாழ்க்கை முறை** |
|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த நிலமும் | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த நிலமும் | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த நிலமும் | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த நிலமும் | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | வறண்ட நிலம் | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

இவை வெறும் நிலவியல் பிரிவுகள் மட்டுமல்லாமல், மனித உணர்வுகளின் அடையாளங்களாக அமைகின்றன என்பதனை,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தரவாரா"[1]

[புறம் : 192]

உலக மக்கள் அனைவரும் நமது உறவினர்கள் என்றும், நமக்கு ஏற்படக்கூடிய நன்மைகளும், தீமைகளும் பிறரால் வருபவைகள் அல்ல அவை நம்முடைய செயல்பாடுகளின் விளைவுகள் என்று சங்க தமிழர் எண்ணுகின்றனர் என்பதனை அறிய முடிகிறது.

**பூமணியின் நாவல்களின் கிராமிய வாழ்வியல்**

கிராம மக்களின் அன்றாட வாழ்க்கையினை பூமணி தமது நாவல்களில் மிகவும் இயல்பாக சித்தரித்துக் காட்டியுள்ளார். அவர் இயற்றியுள்ள கதாபாத்திரங்கள் பெரும்பாலும் உழைக்கும் வர்க்கத்தினரை சார்ந்தவர்களாக உள்ளனர்.

**நிலமும் மனிதனும்**

பஞ்சப்பூதங்களில் நிலத்தையே முதற்பொருளாக கொள்வது தமிழர் மரபாகிறது. நிலத்தை பற்றி சிற்பி பாலசுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிடுகையில், "நிலம் வாழ்வியலை நிர்ணயம் செய்கிற களம், தட்பவெட்ப சூழலும் நீர் வளமும் செடிகொடிகளின் வளர்ச்சியையும் தீர்மானிப்பது போன்றே மனிதர்களின் தொழில், சமூக உறவுகள், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் அனைத்தையும் தீர்மானிக்கின்றன"[2] என விளக்கம் தருகிறார்.

பூமணியின் நாவல்களில் நிலம் என்பது உயிரொடு இணைந்ததாக காணப்படுகிறது இயற்கையின் மீது நம்பிக்கைக் கொண்டு உழவுத் தொழிலையும் தங்களது உழைப்பையும் நம்பி வாழ்கின்றனர் என்பதனை,

"எல்லாவற்றையும் ஆத்தா தான் கவனிக்கனும் நாற்று நடுவதற்கு முதலில் அவள் இறங்கி நாற்றுப் பிடித்துக் கொடுக்கணும்"[3]

[வெக்கை பக்.51]

என்ற வரிகளின் மூலம் பூமணியின் நாவல்களில் கரிசல் மண்ணின் வறட்சி, வெப்பம், உழைப்பின் வலி ஆகியவை கதையின் மையமாக உள்ளன அறிய முடிகின்றது.

சங்க இலக்கியங்களில் உழைப்பின் பெருமையினை போற்றும் வகையில்,

"வினையே ஆடவர்க்கு உயிரே; வாள்நுதல்

மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"[4]

[குறு. 135]

மேலும் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள்களிலும்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்"[5]

[குறள் எண் : 1033]

இயற்கையின் மீது நம்பிக்கை கொண்டு உழவுத் தொழிலை செய்கின்றவர்களுக்கு உழைப்பின் மூலம் ஈட்டக்கூடியதை வைத்து வாழ்வாதரத்தை அமைக்கின்றனர். மற்றவர்கள் அவர்களை வணங்கி பொருள் ஈட்டுகின்றனர் என்பதனை அறிய முடிகிறது.

**பெண்மை உணர்வு:**

சங்க கால பெண்கள் போற்றத்தக்க வகையிலும், சுதந்திரமான மற்றும் உயர்வான நிலையிலும் திகழ்ந்தனர். பெண்கள் கல்வி அறிவு உடையவர்களாகவும் இலக்கியம் படைப்பவர்களாகவும், வீரம், காதல் மற்றும் பொருளீட்டும் திறனிலும் சிறந்து விளங்கினர். சங்க கால தலைவி தன் காதலை பற்றி வெளிப்படையாக தோழியிடம் பகிர்வதனை,

நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று

நீரினும் ஆரளவின்றே; சாரல்

கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு

பெருந்தேன் இழைக்கும் நாடனொடுனாடு நட்பே"[6]

[குறுந் : 3]

தலைவனின் மீது தான் கொண்ட அன்பின் அளவினையும், ஆழத்தினையும் தன் தோழியிடம் தலைவி சுதந்திரமாக கூறுவதனை காண முடிகிறது. ஆனால், பூமணியின் நாவல்களில் பெண்கள் சமூக ஒடுக்கு முறைக்கும், குடும்ப சுமைகளுக்கும், வறுமை நிலைகளிலும் வாழ்பவராக சித்தரிக்கப்பட்டுள்ளன என்பதனை,

"பசிக்கிற பிள்ளைகளைப் பார்த்தா

அவளுக்கே வயிறு எரிகிறது"[7]

[வெக்கை ப.43]

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

பெண்கள் தங்களுக்கு ஏற்படக்கூடிய தனிப்பட்ட துன்பத்தை அனுபவிப்பதை விட குடும்ப சுமையாலும் பசியாலும் வறுமையினாலுமே அதிக துயரத்தை முதலில் சுமக்கிறாள். பிறருக்கு வரக்கூடிய துன்பதையும் தன் துன்பமாக நினைப்பதனை என்பதனை அறிய முடிகிறது.

**தொழிலும் சாதியும்**

சங்க இலக்கியங்களில் சாதி அமைப்புகளைப் பற்றி கடுமையான முறையில் பதிவு செய்யவில்லை. தொழில் அடிப்படையிலான சமூகப் பிரிவுகள் இருந்தன என்பதனை,

"வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்

கீழ்பால் ஒருவன் கற்பின், மேற்பால்

ஒருவனும் அவன்கண் படுமே"[8]

[புறம் 183]

சமூகத்தில் தொழில் அடிப்படையில் பிரிக்கப்பட்ட நான்கு பிரிவினர்கள் வேளாளர், அரசர், வணிகர், அந்தணர் ஆகியோர் ஆவார். எந்த பிரிவில் பிறந்தவராக இருந்தாலும் கல்வி மற்றும் ஒழுக்கங்களில் சிறந்தவராக இருந்தால் அவர்களை மேன்மை அடைந்தோர்களும் மதிப்பர். ஆனால், பூமணியின் நாவல்களில் மேல்சாதியினர் கீழ்சாதியினர் என்ற வர்க்க பாகுபாடுகளும், சாதிய அடக்குமுறைகளும் காணப்படுகின்றன என்பதனை

"ஏலேய் சக்கிலியத்தாயிளி மாடுபாருடா படப்புல மேயிறத

கணணவிஞ்சாப் போச்சு, வாய்க்கு வந்தாத் தெரியுமா"[9]

[பிறகு ப.15]

சாதி பெயர்களையும். செய்யும் தொழிலின் பெயர்களையும் குறிப்பிட்டு அழைக்கும் பண்பினையும் சமூக நிலைமையினையும் அறிய முடிகிறது.

**நம்பிக்கை அன்றும் இன்றும்**

ஒரு சமூகத்தின் வாழ்வியல் பின்புலத்தினை எடுத்துக்காட்டுவதில் வல்லவனாக நம்பிக்கைகள் விளங்குகின்றது. உளவியல் அறிஞர்கள் நம்பிக்கையினை,

"நன்மையின் பால் உள்ள ஆர்வமும், தீமையின் பால் உள்ள அச்சமும் பெரும்பான்மையான நம்பிக்கைக்கு அடிப்படை என்பர்"[10]

**மழை பற்றிய நம்பிக்கை**

சங்க காலத்தில் மழையினை இயற்கை நிகழவாக மட்டும் பார்க்கப்படாமல், கடவுளாகவும், நாட்டின் செழிப்பாகவும், மக்களின் நல்வாழ்விற்க்கு ஆதாரமாகவும் இருப்பதாக எண்ணினர் என்பதனை,

"நீர் இன்றி அமையா யாக்கைக்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"[11]

[புறம் 18]

மழையில்லையெனில் நீர் இல்லை, நீர் இல்லையெனில் உணவு இல்ல, உணவு இல்லையெனில் உயிர்கள் வாழாது. எனவே, மழை என்பது மனித உயிர்களின் அடிப்படை தேவைகளில் ஒன்று என சங்க கால தமிழர்கள் நம்பினார்கள். இத்தகைய மழையில்லாமல் கோடை வெயில் தகிர்க்கும் காட்சியினை பூமணியின் நாவலில்,

"ஊருணிக்கரை உள்சரிவில் நீர்வாகரை விட்டுப் போயிருந்த வரிவளையங்கள் கோடைத் தடங்களாகச் சுருங்கித் தெரிந்தன. கிடங்குகளை மட்டும் மேதி தண்ணீர் பரவலாக கிடந்தது"[12]
[பிறகு ப.111]

என்ற வரிகளின் மூலம் மலை இல்லாமல் ஊருணீக்கரை வறண்ட நிலையில் இருப்பதை என்பதனையும் அறிய முடிகிறது.

**சங்க கால இலக்கியத்திற்கும் பூமணியின் நாவல்களுக்கும் இடையேயான ஒப்பாய்வு:**

| **ஒப்பீட்டு கூறுகள்** | **சங்க கால இலக்கியம் (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு)** | **பூமணி நாவல்கள் (கிராமிய நாவல்கள்)** |
|---|---|---|
| சமூக அமைப்பு | குடி, குலம், மன்னர் மைய சமூக அமைப்பு, வீரர்கள், புலவர்கள் | கிராமக் கூட்டமைப்பு, சாதி, தொழில், நில உரிமை சார்ந்த சமூக அடுக்குகள் |
| வாழ்வியல் அடிப்படை | இயற்கையோடு இணைந்த திணை வாழ்க்கை | நிலம், விவசாயம், கூலி, உழைப்பு, வறுமை சார்ந்த வாழ்க்கை |
| பொருளாதாரம் | வேட்டை, கால்நடை வளர்ப்பு, உழவு, கடல் வாணிபம் | விவசாயம், கிராமச் சிறு தொழில்கள் |
| மனித உறவுகள் | காதல், குலப்பெருமை, காதல் பிரிவுகள் | அண்ணன், தம்பி, மாமன், மச்சான் உறவுகள் |
| பெண்களின் நிலை | காதல், காத்திருப்பு, வீரம், குடும்ப பொறுப்பு | குடும்பச்சுமை, வேலைப் பங்கு, சமூக அடக்குமுறை, போரட்ட நிலை |
| வீர உணர்வு | போர்க்கள வீரர்கள், அரசரின் புகழ் | சமூக எதிர்ப்பு, உழைப்பாளி மன உறுதி |
| நம்பிக்கை | இயற்கை தெய்வங்கள், வீர | குல தெய்வங்கள், சடங்குகள் |

| | | |
|---|---|---|
| | வழிபாடு | |
| உணவு மற்றும் விருந்தோம்பல் | திணை உணவு முறை, விருந்தோம்பல் | கிராமிய உணவு, வறுமை உணவு |
| கல்வி, அறிவு நிலை | புலவர் மரபு, வாய்மொழி கல்வி | பள்ளிக் கல்வி |
| சமூக பார்வை | ஒழுங்குப்படுத்தப்பட்ட, மரபு சார்ந்த சமூக காட்சி | விமர்சமான, சமூக யதார்த்தை வெளிப்படுத்தும் பார்வை |
| முடிவு பார்வை | பழந்தமிழர் பண்பாட்டின் செம்மையான இலக்கிய வெளிப்பாடு | பண்பாடு கலந்த நவீன கிராமிய சமூகத்தின் வாழ்க்கை |

**தொகுப்புரை**

சங்க இலக்கியமும், பூமணி நாவல்களும் வெவ்வேறு காலச் சூழல்களில் தோன்றினாலும் இவை இரண்டிலும் மனித வாழ்வின் அடிப்படை உண்மைகளை வெளிப்படுத்துகின்றன.

சங்க இலக்கியம் இயற்கையோடு இணைந்த தமிழரின் பண்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. பூமணியின் நாவல்கள் சமூக ஒடுக்குமுறையில் வாழும் கிராமிய மக்களின் வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றன.

இவை இரண்டிலும் நிலம், உழைப்பு, மனித உறவு, பெண்களின் உணர்வு ஆகியவை முக்கிய கருப்பொருளாக உள்ளன.

சங்க இலக்கியம் இலக்கிய அழகியலை வலியுறுத்தினாலும் பூமணி சமூக யதார்த்தை வலியுறுத்துகிறார்.

எனவே, பூமணியின் நாவல்கள் சங்க வாழ்வியலின் நவீன பிரதிபலிப்பாக கருதப்படலாம்.

**அடிக்குறிப்புகள்**

[1]. புலியூர்க் கேசிகன் புறநானூறு மூலமும் உரையும் பக்கம் 55

[2]. சிற்பி பாலசுப்பிரமணியன், ஆர் சண்முகசுந்தரம், இந்திய இலக்கியச் சிற்பிகள் பக்கம் 7

[3]. பூமணியின் வெக்கை நாவல் பக்கம் 51

[4]. புலியூர்க் கேசிகன் குறுந்தொகை மூலமும் உரையும் பக்கம் 30

[5]. புலியூர்க் கேசிகன் திருக்குறள் புதிய உரை பக்கம் 215

[6]. புலியூர்க் கேசிகன் குறுந்தொகை மூலமும் உரையும் பக்கம் 15

[7]. பூமணியின் வெக்கை நாவல் பக்கம் 43

[8]. புலியூர்க் கேசிகன் புறநானூறு மூலமும் உரையும் பக்கம் 57

[9]. பூமணியின் பிறகு நாவல் பக்கம் 15

[10]. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு பக்கம் 188

[11]. புலியூர்க் கேசிகன் புறநானூறு மூலமும் உரையும் பக்கம் 18

[12]. பூமணியின் பிறகு நாவல் பக்கம் 111